★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice
Sri Lanka under No: QB/8945/78

மலர்: 20 மார்கழி 26 ஸபர் 10 இதழ்: 326
யாழ்ப்பாணம் புதன்கிழமை 10-1-79

## ஆந்திரப் பிரதேசத்தில் இந்திரா அமோக வெற்றி!

[புதுடில்லி]

ஆந்திரப் பிரதேசத்தில் நடைபெற்ற இரண்டுதொகுதிகளுக்கான சட்டசபை, லோகசபை இடைத்தேர்தலில், இந்திரா காங்கிரஸ் அமோக வெற்றியீட்டியுள்ளது.

ஆந்திரப் பிரதேசத்தில் இரண்டு சட்டசபைத்தொகுதிகளிலும், இரண்டு லோகசபைத்தொகுதிகளிலும்இடைத்தேர்தல் நடைபெற்றது.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை நேற்றிரவு கிடைக்கப்பெற்ற கடைசி முடிவுகளின்படி, சட்டசபை இடைத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ் ஒரு ஸ்தானத்தையும், இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி ஒரு ஸ்தானத்தையும் கைப்பற்றியது. 2 தொகுதிகளுக்கான லோகசபைத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ் ஒரு தொகுதியில் மிகப்பெரும்பான்மை பலத்துடன் மகத்தான வெற்றியீட்டியுள்ளது. மற்றைய தொகுதியின் முடிவு இச்செய்தி அச்சுக்குப்போகும்வரை அறிவிக்கப்படவில்லை.

கட்டிடப்பகுதி - பதிவாளர்நாயகம் பகுதி

# ஊழியர்கள் நடத்திய அலுவலகப் 'போர்'!

## கைகலப்பில் பலர் காயம்;

### ஒருபகுதி ஊழியர்கள் வேலைநிறுத்தம்

[கொழும்பு]

கட்டிடப் பகுதியைச் சேர்ந்த சில ஊழியர்களுக்கும், பதிவாளர் நாயகம் பகுதி கிளை அலுவலகத்தைச் சேர்ந்த சில ஊழியர்களுக்குமிடையே நேற்றுப் பிற்பகல்நடைபெற்ற "அலுவலக கைகலப்பை'த் தொடர்ந்து, பதிவாளர் நாயகம் பகுதி ஊழியர்கள் நேற்று வேலைநிறுத்தத்தில் குதித்தனர்! இப்பகுதியில் நேற்று பதட்டநிலை காணப்பட்டது.

கைகலப்பின் போது ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன என்றும், பதிவாளர் நாயகம் பகுதி ஊழியர்கள் பலர் தாக்குதலுக்குள்ளானார்கள்என்றும் அறிவிக்கப்பட்டது. மருதானை பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர்.

இவ்விரு கிளை அலுவலகங்களும் மாளிகாவத்தையிலுள்ளன.

**கைகலப்பு ஏற்பட்ட விபரம்**

கட்டிடப்பகுதி ஊழியர்கள் இருவர் நேற்றுக்காலை பதிவாளர் நாயகப்பகுதி கிளை அலுவலகத்துக்குச் சென்று சில ஊழியர்களைத் தாக்கினர் என்றும் அப்போது இவ்விரு ஊழியர்களையும் ஒரு அறையில் பூட்டி வைத்து பதிவாளர் நாயகம் பகுதி ஊழியர்கள் பொலிசாருக்கு அறிவித்தனரென்றும் இதனைத் தொடர்ந்து, இரும்பு போன்ற ஆயுதங்கள் சகிதமாகப் 'போர்' தொடுத்துசென்ற மற்றுமொரு கட்டிடப்பகுதி ஊழியர்கள் கோஷ்டி, பதிவாளர் நாயகம் பகுதிக்குள் பலவந்தமாக நுழைந்து தங்களின் இரண்டு ஊழியர்களையும் மீட்டதுடன் அங்கிருந்த பல ஊழியர்களையும் தாக்கினர் என்றும், பலர் காயமடைந்தனரென்றும் பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்வரை வேலைநிறுத்தம் செய்வோமென்று அறிவித்து, பதிவாளர் நாயகம் பகுதி கிளை ஊழியர்கள் நேற்றுப்பிற்பகல் முதல் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர். (ம)

## ஸ்ரீ நடராஜருக்கு மார்கழிப் பூ அலங்காரம்

[யாழ்ப்பாணம்]

ஈழத்துச் சிதம்பரத்தின் ரதோற்சவத்தில் நாளை ஸ்ரீ நடராஜப் பெருமானை அலங்கரிக்கும் பொருட்டு தென்னிந்தியாவில் இருந்து விசேடமாக மார்கழிச் செவ்வந்திப் பூக்கள் தருவிக்க ஆதீனகர்த்தாக்கள் ஏற்பாடு செய்துள்ளனர். [உருத்-நி-உ]

## டிராக்டர் சாரதி வெட்டிக் கொலை!

### மட்டுநகரில் சம்பவம்

[மட்டக்களப்பு]

கல்லடி-உப்போடையைச் சேர்ந்த வி. சிவபாதம் [31 வயது] என்ற டிராக்டர் சாரதி கத்தியால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இது சம்பந்தமாக அதே யிடத்தைச் சேர்ந்த கே. திருநாவுக்கரசு, ரி. பேரின்பராஜா, ரி. கணபதிப்பிள்ளை என்னும் மூவர் தேடப்பட்டு வருகின்றனர்.

இச்சம்பவம் பற்றி பொலிஸார் புலன் விசாரணை செய்து வருகின்றனர். [உ]

## வடபகுதி ரயில்சேவை வழமையானது

[யாழ்ப்பாணம்]

வடபகுதி ரயில் சேவைகள் நேற்று முதல் வழமையானது.

தம்புத்தேகமவுக்கும் - தலாவைக்குமிடையே கடந்த சனிக்கிழமை சரக்கு ரயில் தடம் புரண்டதைத் தொடர்ந்து வடபகுதி ரயில் சேவை சீர்குலைந்தது இதனால் கொழும்புக்கும் யாழ்ப்பாணம், தலைமன்னார் . பகுதிகளுக்குமிடையிலான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன

நேற்றுக் காலை கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு புறப்பட்ட கடுகதி ரயில். நேற்று பிற்பகல் 3-20-க்கு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. இடையில் பிரயாணிகள் ஏற்றி இறக்கப்படாமல் இந்த ரயில் முதற்தடவையாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

மற்றைய எல்லா ரயில் சேவைகளும் நேற்று முதல் வழமைக்குத் திரும்பின.

செம்மணி

## மயான கிணற்றில் கிடந்த சடலம்!

### கொலையா? தற்கொலையா?

[யாழ்ப்பாணம்]

யாழ் செம்மணி மயானத்திலுள்ள கிணற்றிலிருந்து அழுகியநிலையில் ஒரு ஆணின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அடையாளம் காணமுடியாத நிலையில் இச்சடலம் யாழ் ஆஸ்பத்திரி பிரேதச்சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது.

மரணவிசாரணையை திடீர் மரணவிசாரணை அதிகாரியும் யாழ்ப்பாணம் பதில் நீதவானுமான திரு. சி. அமிர்தலிங்கம் நடத்தினார்.

இறந்தவருக்கு வயது 25 இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. உடலில் காயம் காணப்பட்டது. இது கொலையா, அல்லது தற்

(6ம் பக்கம் பார்க்க)

## ஓடிய ரயிலில் ஏறியவர்...

[யாழ்ப்பாணம்]

ஆசனம் பெறவேண்டும் என்ற அவசரத்தில் ஓடிக்கொண்டிருந்த ரயிலில் ஏறிய ஒரு இளைஞர் ஆபத்துக்குள்ளானார்!

காங்கேசன்துறையிலிருந்து யாழ். வந்த இரவு மெயில் ரயில் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் நிறுத்தப்படுவதற்கு முன்னதாக ஆசனம்பிடிக்கும் ஆர்வத்தில் துள்ளி ஏறிய எஸ். பூபாலரத்தினம் (18 வயது) எனும் இளைஞர் ஓடிக்கொண்டிருந்த ரயிலுக்கும், ரயில் மேடைக்குமிடையே தவறி விழுந்தார்.

[6ம் பக்கம் பார்க்க]

சூறாவளியால் பாதிக்கப்பட்ட

## கல்குடா கிராமம் ஒன்றை காவலூர் புனரமைக்கிறது

(யாழ்ப்பாணம்)

கல்குடா தொகுதியில் சூறாவளியில் பாதிக்கப்பட்ட கிண்ணையடி கிராமத்தைப் புனரமைக்கும் வேலைகளை ஊர்காவற்றுறை தொகுதியினர் பொறுப்பேற்றுள்ளனர்.

தொகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகிறது.

அண்மையில் ஊர்காவற்றுறை தொகுதியிலிருந்து 1000 பாய்கள், கிடுகுகள், கயிறு ஆகியவற்றை இரண்டு ரயில் பெட்டிகளில் ஏற்றிச் சென்ற 2 தொண்டர் தலைவர்கள் கிண்ணையடி கிராமத்தில் புனரமைப்புக்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு திரும்பினர் என்றும் மற்றும் 10 தொண்டர்கள் பொங்கலுக்கு மறுநாள் கல்குடாவுக்குச் சென்று மேலும் புனரமைப்பு பணிகளை மேற்கொள்வர் என்றும் பண்டிதர் இரத்தினம் தெரிவித்தார்.

இதே வேளையில் பனையிலிருந்து ரயில் பெட்டிகளில் கிடுகுகளை அனுப்பவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பண்டிதர் தெரிவித்தார். (இ)

## யாழ். பல்கலைக்கழக வேந்தர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வேந்தராக ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. வி. மாணிக்கவாசகர் பதவி ஏற்றுக்கொண்டார்.

ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. வி சிவசுப்பிரமணியம் இப் பதவியை ஏற்றுக்கொண்டுள்ளதாக நேற்றைய "ஈழநாடு" இதழில் வெளிவந்த செய்தி தவறானதாகும், தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

## சீனச்சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியில் கைகலப்பு!

(யாழ்ப்பாணம்)

சீனச்சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியில் சமீபத்தில் ஏற்பட்ட பிளவு நேற்று மாலை கைகலப்பில் முடிந்ததுடன் இருதரப்பிலும் தொடர்ந்து பரபரப்பான நிலை தோன்றியிருப்பதாகக் கூறப்படுகிறது.

திரு நா. சண்முகதாசன் தலைமையிலான இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்திலிருந்து இருவரைப் பதவி நீக்கம் செய்துள்ளதாகவும் சம்மேளனத்துக்குச் சொந்தமான சகல தஸ்தாவேஜுகளையும் பொருள்களையும் சொத்துக்களையும் பொறுப்பேற்கும்படி திரு. சண்முகதாசன் யாழ்ப்பாணப் பிரதேசக் கமிட்டிக்கு அறிவித்திருந்ததைத் தொடர்ந்து யாழ். முனீஸ்வரன் வீதியிலுள்ள நூல் நிலையத்தில் இருதரப்பினருக்கிடையில் கைகலப்பு ஏற்பட்டதாகவும் திரு. சண்முகதாசன் தலைமையைச் சேர்ந்தவர்கள் நூல் நிலையத்தைப் பொறுப்பெடுத்துக் கொண்டதாகவும் அறியப்படுகிறது.

# "தமிழக தருமபுர - நல்லையாதீன தொடர்பு வலுவானது"

## மணிவாசகர் விழாவில் பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

"தமிழகத்திலுள்ள தருமையாதீனத்திற்கும் ஈழத்திலுள்ள நல்லையாதீனத்திற்கும் இடையே ஏற்கனவே அன்பால் மட்டுமே தொடர்பு இருந்து வந்தது இப்போது அவர்கள் எமது ஆதீனத்திலிருந்து வருடந்தோறும்மூன்று மாணவர்களைப் பயிற்றுவித்து உதவுகின்றனர். இவர்கள் பயிற்றுவித்த ஒரு மாணவனே இன்று திருக்கேதீஸ்வரத்தில் ஓதுவாராக இருந்து வருகின்றார்" என்று ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்ற மணிவாசகர் விழாவில் ஆசியுரை நிகழ்த்துகையில் நல்லைஞான சம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;-

"தமிழகத்திலுள்ள சைவ ஆதீனங்களுள் தருமை ஆதீனமே தலைசிறந்து விளங்குகின்றது. இவ்வாதீனம் இருபத்தேழு ஆலயங்களைச் சிறப்புற நிர்வகித்து வருவதோடு சைவ உலகிற்கு சிறந்த அறிஞர்களை அளித்து அவர்கள் மூலமாக சைவசமயத்தை உலகெலாம் விளங்கவைக்கின்ற பணியினைச் சிறப்புற ஆற்றி வருகிறது."

"சிறந்த ஓர் ஆதீனத்தில் இருந்து அறிஞரான வித்துவான் வி. சா. குருசாமிதேசிகரை இவ் விழாவில் பணியாற்றுவதற்கு காரைநகர் மணிவாசகர் சபையினர் அழைத்திருப்பது சபையின் சமயப்பணிக்கு சிகரம் வைத்தாற்போல் அமைந்துள்ளது என்றே கூறலாம்" என்றார். (உருத்-நி-உ)

# புங்குடுதீவு மருத்துவ வளர்ச்சி: வாலிபர் மன்றம் உதவும்

(காரைநகர்)

புங்குடுதீவு வைத்தியசாலைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விடயத்தில் தம்மாலியன்றதைச் செய்வது என்று புங்குடுதீவு இந்து வாலிபர் மன்றம் தீர்மானித்துள்ளது.

மன்றத்தின் பொதுக்கூட்டம் பெருங்காடு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் திரு. ந. குலேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு சூறாவளி நிவாரண வேலைகளில் தமது பங்கைச் செலுத்துவதெனவும் கண்ணும்பிட்டி வைரவர் ஆலயத்தைக்கட்டி முடிப்பதென்றும் வேறு இரு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மன்ற நிர்வாகிகள் விவரம் ஆலோசகர்கள் சி. மாணிக்கம் புலவர் ஈழத்துச் சிவானந்தன் காப்பாளர்கள் நா. சோமசுந்தரம் செ. தனபாலசிங்கம் க. தம்பிராஜா தலைவர் ந. குலேந்திரன் உப தலைவர் நாக சாந்தலிங்கம் செயலாளர் சி.சிவமோகன் உப-செயலாளர் திரு. உதயகுமார் பொருளாளர் சு. குணரத்தினம் எண்பார்வையாளர்கள் சி. சின்னத்துரை சோ. கனகரத்தினம் கொழும்புப்பிரதிநிதிகள் மூவரும் நிர்வாக உறுப்பினர்கள் 13 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (உ)

# கடந்த ஆண்டு எஞ்சியநிதியில் அபிவிருத்தி வேலைகள்

## யாழ். எம். பி., அரச அதிபர் நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத் தொகுதிக்கு 78ம் ஆண்டில் பன்முகபடுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் செலவிடப்படாத பணத்தை உடனடியாகத் தொகுதி அபிவிருத்திக்குச் செலவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ் அரசாங்க அதிபர் திரு லயனல் பெர்னாண்டோ, யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் யாழ்.தொகுதி அபிவிருத்தி அதிகாரி ஆகியோரின் முயற்சிகளால் இந் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட நிதியிலிருந்து தொகுதியிலுள்ள 19 சனசமூகநிலையங்களுக்கான அபிவிருத்தி வேலைகளுக்குப் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் அமுலுக்கு வந்தபின் முதல்முறையாக நகர்ப்புறச் சனசமூகநிலையங்களுக்கு நிதி ஒதுக்கியது இதுவே முதல் முறையாகும்.

மேற்படி பாவிக்கப்படாத நிதியில் 73,000 ரூபாவுக்குக் குளிர்சாதனப் பெட்டிகள், மின்சாரக் கேத்தில்கள், மருந்து கட்டும் துணி, மருந்து வகைகள், வைத்திய உபகரணங்கள் ஆகியவற்றைக் கொள்வனவுசெய்து, யாழ். ஆஸ்பத்திரிக்கு வழங்கவுள்ளதாகவும், 1 லட்சத்து 60 ஆயிரம் ரூபா செலவில் யாழ். ஆஸ்பத்திரி இருதய நோயாளர் வார்ட்டுக்கு 'லிப்ட்' பொருத்தப்படவுள்ளதாகவும் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் கூறியுள்ளார்.

இதேபோல் நாவாந்துறை புனித திரேசா தையல்நிலையத்தின் கட்டிடத்திற்கு ஒதுக்கப்பட்டு, பாவிக்கப்படாதிருந்த நிதியைக் கொண்டு தையல் மெஷின்களை வாங்கி, மேற்படி தையல்நிலையத்திற்குக்கொடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஊ.இ)

## யாருடையது?

யாழ் மணிக்கூட்டுக் கோபுரம் முன்பாக, மோட்டார் சைக்கிள் திறப்பொன்றை யாழ்இந்துக்கல்லூரிமாணவன் ந மாதவராசா கண்டெடுத்து "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்தஅத்தாட்சிகாட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

# டி. ஐ. ஜி. ஜோசெப் யாழ். விஜயம்

(சொக்குவில்)

உதவிப் பொலிஸ் மா அதிபர் திரு. ஜோசெப் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

அவர் இங்கு தங்கியிருந்த நாட்களில் குடாநாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் விஜயம் செய்தார்.

இவ்விஜயத்தின்போது பொலிஸ் நிலையக்குறைகளைக் கேட்டறிந்ததுடன் யாழ் மாவட்டப்பொலிஸ் நிலையங்களிலுள்ள பொலிஸ் விடுதிகளைச் சீர்ப்படுத்துவதற்கு ஆவனசெய்வதாகக் கூறியுள்ளதாகத் தெரியவருகிறது. (உ)

# இலவச பாடப்புத்தக விநியோகம்

(மட்டுவில்)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட ஏழைமாணவர்களுக்கு சாவகச்சேரி நகரசபை இலவச பாடப்புத்தகங்களை வழங்கும்.

இந்த ஆண்டு சாவகச்சேரி நகரசபை ஏழைமாணவர்களின் இலவச பாடப்புத்தகத்திற்காக ஆறாயிரம் ரூபா ஒதுக்கியுள்ளதாக நகரசபை விசேட ஆணையாளர் திரு ரி நவரத்தினராஜா தெரிவித்தார் (உ)

# சங்கக்கடையில் திருட்டு

[பண்டத்தரிப்பு]

சங்கக்கடை ஒன்றில் இரவு நேரத்தில் ஓட்டைப்பிரித்து இறங்கிய திருடர்கள் அங்கிருந்த 300 ரூபா பெறுமதியான பால் டின்களையும் பவுடர்டின்களையும் திருடிக் கொண்டு சென்ற சம்பவம் அராலி வடக்கில் நடைபெற்றுள்ளது.

சங்கானை ப. நோ. கூ. சங்க அராலி வடக்கு கிளையில் நடைபெற்ற இத்திருட்டுச் சம்பவம் பற்றி சங்கானை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சங்கானைப் பொலிஸ் நிலைய சார்ஜன்ட் திரு. டி. ஏ. குலரத்தின ஸ்தலத்திற்கு சென்று விசாரணை நடாத்தினர் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. [உ]

# இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

வலி. மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த எட்டு ஆண்டுகளாக விளையாட்டு அதிகாரியாக கடமையாற்றிய திரு. இ. சுப்பிரமணியம் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இடத்திற்கு செட்டிகுளத்தில் விளையாட்டு அதிகாரியாக கடமையாற்றிய திரு. வி. செல்வராஜா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [உ]

## வேலணை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்

(மட்டுப்படுத்தப்பட்டது)

கீழ்க்குறிப்பிடும் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### காசாளர் தரம் III

(1) இலங்கைப் பிரஜைகளாக இருக்க வேண்டும்.

(2) வயது 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

(3) கல்வித்தகமை:

(அ) எண் கணிதத்தில் அல்லது கணக்கியலில் அல்லது வர்த்தக எண் கணிதத்தில் குறைந்த பட்சம் ஒரு திறமைச் சித்தியேனும் உடைய ஆறு பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. [சாதாரண தரச்] சித்தி அல்லது.

(ஆ) தற்பொழுது சங்கங்களில் சேவையில் இருப்பவர்களுக்கு 3 வருடத் திருப்திகரமான சேவை அனுபவம் உடையவர்.

(4) சம்பளவிகிதம்:

160 — 265

6×10 — 7.50×6

(5) பிணைப்பணம்:

ரொக்கம் ரூபா 1000/-

ஆதனம் ரூபா 2000/-

மேற்குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை 16-1-79 திகதிக்கு முன்பாக பதிவுத் தபால் மூலம் "பொது முகாமையாளர், வேலணை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், வேலணை" என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ஆ. பாலேந்திரன்,
பொதுமுகாமையாளர்,
வேலணை தெங்குபனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்

திகதி: 8-1-79. 1269

# கேள்வி விளம்பரம்

## வேலணை ப.நோ.கூ. சங்கம் வேலணை

### புதிய லொறிக்கு கூடாரம் அடிப்பதற்கான கேள்விகள்

புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட ஆறு தொன் கொள்ளவுள்ள "இசுசு" மோட்டார் லொறிக்கு கூடாரம் (BODY) அடிப்பதற்கான உத்தேச மதிப்பீட்டைப் பெறுவதற்கு பதிவுசெய்யப்பட்ட தொழில் ஸ்தாபனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன, பூரண விபரங்கள் யாவும் 23-01-79க்குமுன் பதிவுத் தபாலில் "பொதுமுகாமையாளர், வேலணை ப. நோ கூ. சங்கம், வேலணை" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். மேலும் விபரங்களுக்கு அலுவலகநேரத்தில் நேரில் தொடர்புகொள்ளவும்.

பொதுமுகாமையாளர்
ப. நோ. கூ. சங்கம்,
வேலணை.
1279

## வலி. கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நீர்வேலி

### வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திரம் அறிவித்தல்

டி சங்கத்தில் 7500 வெற்றுச் சாக்குகள்வரை கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்குண்டு 1979-01-18, வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரை கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களை 79-1-16 வரை டி சங்கக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி விண்ணப்பப் பத்திரம் ஒன்று ரூபா 1/-ம் வைப்புப் பணமாக ரூபா 250/-ம் செலுத்தவேண்டும்.

மேலதிக நிபந்தனைகளையும் விபரங்களையும் மேற்படி சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் யாவும் பொதுமுகாமையாளர், வலி. கிழக்கு தென்பகுதி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி, என்ற முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைக்கப்படல்வேண்டும். இக் கேள்விப்பத்திரம் சங்கத்தால் நிராகரிக்கப்படுவதற்கு உரிமை உண்டு. தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் வெற்றுச்சாக்குகளுக்கான கேள்வி விண்ணப்பம் என எழுதப்படல்வேண்டும்.

இங்ஙனம்,
பொதுமுகாமையாளர்.
நீர்வேலி,
1979-01-08. 1278

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இங்கிலாந்திலிருந்து அண்மையில் தருவிக்கப்பட்ட 1974-ம் மொடல் "8 ஸ்ரீ" '404' கார் விற்பனைக்குண்டு. R சிவசண்முகம், 73, பானிப்பாய் வீதி. (ஈழநாடு காரியாலயத்திற்கு அண்மையில்) வண்ணார்பண்ணை. 1273

நல்ல நிலைமையிலுள்ள இரு கடைகள் பலாலி வீதி, அம்மன் வீதி சந்திக்கருகாமையில் விற்பனைக்குண்டு. மின்சாரம் தண்ணீர் வசதியுள்ளது. N. மோகன், 46, பலாலி வீதி, கந்தர்மடம். 1276

புத்தம் புதிய ஹித்தாச்சி 3 இன் 1, சன்யோ கசற் றெக்கோடர் (பெரியது) 2 இன் 1 விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும்: செ. நிமலன், 10, சட்டநாதர் வீதி, நல்லூர் அல்லது றமணிகோப்பறேசன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 1280

## தேவை

அனுபவமுள்ள வியாபாரப் பிரதிநிதிகள் உடன் தேவை. சிங்களம், தமிழ் பேசக்கூடியவர்கள் விரும்பத்தக்கது. 12-1-79 வெள்ளிக்கிழமை காலை 9-00 — 10-00மணிக்கு நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும். கண்ணு புரடக்ஸ், சுன்னாகம். 1270

20 வயதுக்குட்பட்ட, மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும், மின்சார வேலை பழக விரும்புபவர்கள் உடன் தேவை. விபரம்:W.G பெர்னாண்டோ, அன் பிறதர்ஸ், 215, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 1275

## பயிற்சி

3 மாத விசேட மின்னியல் டிப்ளோமா பயிற்சி 12-01-1979 ஆரம்பமாகவுள்ளது. விபரங்கட்கு: இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11 B, மொம்சாக்கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1281

## மணிவாசகர் விழா

(சித்தன்கேணி)

சித்தன்கேணி ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் மணிவாசகர் விழா இன்று மாலை நடைபெறுகிறது.

## யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையுள்ளது)

### புடவை விநியோகம்

11-1-79 வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சகல கிளைகளிலும் கிளைகளைச் சார்ந்தவர்கட்கு திருவுளச் சீட்டு மூலம் காற்சட்டை, சேட்துணிகள் விநியோகிக்கப்படும்.

பொதுமுகாமையாளர்
74/3, அல்விரட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்.
8-1-79. 1277

## நொத்தாரிசுமார் சட்டம் 107-ம் அத்தியாயம் 7-ம் பிரிவின் படியான அறிவித்தல்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பரமேஸ்வரா ஒழுங்கையில் வசிக்கும் சரவணமுத்து புவனசுந்தரம் ஆகியநான் யாழ்ப்பாண வலயத்தில் தமிழ் மொழியில் பிரசித்த நொத்தாரிசு ஆகக்கடமை பார்க்க என்னைநியமிக்கும்படி இத்திகதி தொடக்கம் ஒருமாதத்தின்பின் கொழும்பு பதிவு காரியகர்த்தர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்ய இருக்கிறேன் என்பதனை இதனால் அறியத்தருகிறேன்.

ச. புவனசுந்தரம்.

பரமேஸ்வரா ஒழுங்கை,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
திகதி: 1979-01-05. 1258

# மக்கள் கருத்து

## சிங்கப்பூரில் தவிக்கும் 68 தமிழ் இளைஞர்கள்

சிங்கப்பூரிலுள்ள ஸ்தாபன மொன்றின் உற்பத்தி இயக்குநராகப் பணியாற்றும் கொக்குவிலைச் சேர்ந்த ஞானசேகரம் பாலசுப்பிரமணியம் ஆகிய நான் 23-12-78 அன்று யாழ்ப்பாணத்தில் இருந்து வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவதாகக் கூறி அழைத்துச் செல்லப்பட்ட 68 இளைஞர்கள் சிங்கப்பூரில் படும் அவலம் கண்டு மிக மனக்கவலை அடைந்தேன்.

யாழ்ப்பாணத்திலிருந்து பல இளைஞர்களுக்குச் சிங்கப்பூரில் வேலை பெற்றுத்தருவதாக உறுதி கூறி, அவர்களிடமிருந்து பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுக்கொண்டு உல்லாசப்பயண விசா மூலம் அவர்களைச் சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்றவர் ஒருசில இளைஞர்களைச் சிங்கப்பூர் விமான நிலையத்தில் அதிகாரிகளிடம் சிக்கவைத்துவிட்டு ஏனையவர்களை ஏதோ வழியில் அழைத்துச் சென்றார். அங்கு அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர்கள் இவரினால் கைவிடப்பட்டு தவித்த வேளையில் தமிழர் சீர்திருத்தக் கழகம் அவர்களுக்குப் புகலிடம் கொடுத்தது.

இன்றுவரை எவருக்கும் எதுவித வேலையும் இல்லாத நிலையிலும் அழைத்துச் சென்றவரை அங்கு காணாத நிலையிலும் மிகவும் பரிதாபகரமான நிலையில் இலங்கை திரும்புவதற்குத் தங்கள் உறவினர்களின் உதவியை நாடி நிற்கின்றார்கள் அவர்கள் கைவசம் இலங்கைக்குத் திரும்புவதற்கோ அன்றி தொடர்ந்து அங்கு தங்கி நிற்பதற்கோ எதுவித பணமும் இல்லாத நிலையில் இருக்கிறார்கள்.

அங்குள்ள ஒரு சில இலங்கையரின் உதவியுடன் ஆறு இளைஞர்களுக்குமட்டும் காததோங் ஸ்ரீ செண்பக விநாயகர் ஆலயத்தில் வேலைபெற்றுக் கொடுத்து உதவினேன். ஏனையவர்கள் ஒரு சில நிறுவனங்களில் தமது சொந்த முயற்சியுடன் தமது பணத்தைச் செலவு செய்து வேலைவாய்ப்புப் பெறுவதற்கு முயற்சிசெய்து அதுவும் கைகூடாத நிலையில் எதுவித முடிவுகளுமின்றிப் பரிதவிக்கிறார்கள்.

நான் சென்ற 5-1-79 அன்று நாடு திரும்பினேன். நான் வந்த விமானத்திலேயே இந்த இளைஞர்களைச் சிங்கப்பூருக்கு அழைத்துவந்த அந்த மனிதர் இலங்கைக்கு வந்துவிட்டார். வேலை பெற்றுக்கொடுக்கப்பட்ட ஆறு இளைஞர்களைத் தவிர்ந்த ஏனைய இளைஞர்கள் திரிசங்குசுவர்க்க நிலையில் அங்கு அலைந்து திரிகிறார்கள்.

ஆலயத்தில் வேலைபெற்றுக்கொடுக்கப்பட்ட ஆறு இளைஞர்கூட, ஆலயத் திருப்பணி வேலைகள் முடிவடைந்த பின்னர் ஐந்தாறு மாதத்தில் நாடு திரும்பவேண்டிய நிலை தான் ஏற்படும்.

அங்கு பரிதாபகரமான நிலையில் இளைஞர்களை அழைத்துச் சென்றவர் இங்கு வந்துவிட்டார். வந்தாலும் வந்தார், இரண்டு மொரிஸ் ஒக்ஸ்போர்ட் கார்களுடன் வந்தார்.

இன்னும் 200 இளைஞர்களிடம் இம்மாதம் 7ந் திகதி அழைத்துச் செல்வதாகக்கூறி முற்பணம் வாங்கியுமுள்ளார். மேற்படி நபர் 7ம் திகதி வரை அவரை எதிர்பார்த்த இளைஞர்கள், அவர் வராததால் நேற்று அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்குப் படையெடுக்கத் தொடங்கினர். எங்கே அவர்?

ஞா. பாலசுப்பிரமணியம்
கொக்குவில்.

## உண்மை நிலை உணர்ந்த ஆணையாளருக்கு ஒரு சபாஷ்

கடந்த 6-1-79 'ஈழநாடு' பதிப்பில் நவீன சந்தை 2ம் கட்டட ரெண்டர் முறையைப் பற்றி - யாழ். மாநகரசபை விசேட ஆணையாளர் கடைப் பிடிக்கும் முறையைப்பற்றி இருவர் விமர்சித்துள்ளார்கள். அதாவது பணம் இல்லாதவர்களுக்கு குத்தகை உரிமை இல்லையாவென்பது அந்த உண்மையான ஏழைகள் என்பதானாலைப்பொறுத்தமட்டில் அரசியல்வாதிகளுக்குப் பின்னால் செல்லுபவர்கள் உண்மையான ஏழைகள் குத்தகை உரிமையைப்பற்றிச் சிந்திக்கமாட்டார்கள். அது உண்மையென்பது ஒரு பக்கமிருக்க இன்னுமொரு பிரதான விஷயத்தை நாம் மனதில்கொள்ள வேண்டும்.

நவீன சந்தை 1ம் கட்டடம் குத்தகைக்கு விடப்பட்டபோது எத்தனையோ ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன. கையில் பணமில்லாதவர்கள் கூட குத்தகையெடுத்து அதை மற்றவர்களுக்கு குத்தகையை விற்றதன் மூலம் ஏராளமான பணம் பெற்றுள்ளனர்.

137 கடைகளின் மூன்றில் இரண்டு பங்கு இரண்டாம், மூன்றும் கட்சிக்காரர்களால் நடத்தப்பட்டு, ஆணையாளர் இதைக் கண்டுபிடித்து உண்மையாக நடத்துபவர்களுக்கு மற்றவர்களுக்கு மேலும் மாற்றிக் கொடுக்காதபடி ஒழுங்கு நிரைப்படுத்தி ஊழல் இல்லாதபடி செய்து சபாஷ் பெற்றுள்ளார் என்பது வரியிறுப்பாளர்களாகிய எங்களுக்குத் தெரியும்.

மேலும் நடப்பு ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இதுவரை காலமும் நிரந்தரமில்லாமல் நிர்க்கதியான 200க்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு நிரந்தர மாதச்சம்பளத்தில் நியமித்து அவர்களுக்கு நிவாரணமளித்துள்ளார் என்பது வரியிறுப்பாளர்களுக்கு நன்கு தெரியும். முன்னைய ஆட்சியில் நியமனத்தில் எத்தனையோ ஊழல்கள் நடைபெற்றனவென்பதும் தெரியும். ஆகவே ஏழை மக்களின் வயிற்றில் அடிக்காமல் வரவு-செலவை திறம்படச் செய்துள்ள ஆணையாளரை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

அத்துடன் நவீன சந்தையில் கடை நடாத்துவதாயின் குறைந்தது 1 லட்சம் வேண்டும். ஏழைகளாகிய நாங்கள் இதை நினைத்துப்பார்க்க முடியுமாவென்பதுபற்றிச் சிந்திக்க வேண்டுமென்பது எனது தாழ்மையான வேண்டுகோளாகும்

'யாழ்வாசி'

## பொங்கல் விழா

(திருநெல்வேலி)

திருநெல்வேலி கலாமன்றம் பொங்கல் விழாவை பலநிகழ்ச்சிகள் கொண்டதாகவிரிவாகக் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது.

சிறப்பு அம்சமாக இருநாடகங்களும் இடம்பெறவுள்ளன.

[உ]

### பார்லிமெண்டில் எரிமலை

# பிரதமர் என்னைக்குறுக்கு விசாரணை செய்யமுடியாது

-- சிறிமா

# அதுஉரியஇடத்தில்நடக்கும்

-- பிரதமர்

## கம்பகா கூட்டம் பற்றிக் காரசாரம்

புதிய வருடத்தின் முதலாவது அமர்வுநாளன்றே பாராளுமன்றத்தில் எரிமலை குமுறியது!

அதுவும், சபையின் முக்கியமான ஓர் இடத்திலிருந்து முக்கியமான ஓர் இடத்தை நோக்கி முக்கியமான ஒரு விஷயம் தொடர்பாக எழுந்தது. அதன் சீற்றம் மறுநாளும் கூட சபையில் எதிரொலித்தது

### முதன்முதலில் சபை கூடியதும்

கடந்த வியாழக்கிழமை புதிய ஆண்டில் சபை முதன்முதலாகக் கூடியபோது, பொதுசன பாதுகாப்புச் சட்டப் பிரகடனத் தீர்மானம் மீது பிரதமரும், உள்ளூராட்சி வீடமைப்பு நிருமாணத்துறை அமைச்சரும் சபை முதல்வருமான திரு. ஆர். பிரேமதாசா பேசிக்கொண்டிருக்கையிலேயே அவர் எரிமலையாகச் சீறினார்.

அவரின் சீற்றம் எதிர்க்கட்சி முன்வரிசையில் அமர்ந்திருந்த சுதந்திரக்கட்சித் தலைவியும் அத்தனகல உறுப்பினருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவை நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்தது.

நாட்டின் பிரதான இரு இனங்களிடையே பலதடவைகளில் பெரும் பலதிப்பை ஏற்படுத்திவிட்ட இனக்கலவரத்தைத் தூண்டும் பேச்சுக்கள் தொடர்பாகவே இக் குமுறல் ஏற்பட்டது.

### கூட்டணியினரின் உன்னிப்பான கவனம்

தமிழினத்திற்கு எதிராக ஏவிவிடப்படும் இனவாதப் பேச்சுக்களுக்கு எதிராக பிரதமர் இப்படிக் கொதிப்படைந்தார். அவருக்கும் திருமதி சிறிமாவுக்குமிடையே காரசாரமான வாக்குவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது சபையில் பிரதான எதிர்க்கட்சியினரான தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அமைதியாகவும் ஆனால், வெகு உன்னிப்பாகவும் இவற்றை அவதானித்துக்கொண்டிருந்தனர்.

ஆரம்பத்தில், வாய்மூல வினாக்களுக்கு விடையளிக்கும் போதே உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. ஹேரத்துக்கும், சுதந்திரக் கட்சியைச்சேர்ந்த ஹரிஸ்பத்துவ 2வது உறுப்பினர் திரு. ஆர். பி. விஜயசிறிக்குமிடையே வாக்குவாதம் மூண்டது.

கடந்த வரவுசெலவுத் திட்டத்தின் பின்னர் தமது தொகுதியில் பங்கீட்டுப்புத்தகங்களை இழந்தவர்களின் எண்ணிக்கையும், பின்னர், மேன்முறையீடு செய்ததால் அவற்றைத் திருப்பப்பெற்றவர்களின் எண்ணிக்கையையும் அவர்களின் பெயர் முகவரிகளையும் திரு. விஜயசிறி அமைச்சரிடம் கோரியிருந்தார்.

### எதிர்க்கட்சினர் கரகோஷம்

பங்கீட்டுப் புத்தகங்களை இழந்த 39167 பேரில் 672 பேரின் புத்தகங்கள் திருப்பி வழங்கப்பட்டதாகத் தெரிவித்த அமைச்சர், அவர்களின் பெயர், முகவரிகளைக் கூறுவதற்கு தமக்கு அவகாசம் வேண்டும் என்று கூறி, இந்த விபரங்களை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திலேயே பெறமுடியுமென்றும் இச்சபையில் இவற்றைக் கேட்டு சிரமத்தையும் செலவையும் உறுப்பினர் ஏற்படுத்துவதாகவும் இதனால் பொதுமக்களின் பணமே விரயமாவதாகவும் இவை நீதியற்றவையென்றும் ஆத்திரமடைந்து பேசிக்கொண்டிருந்தபோது தலையிட்ட சபாநாயகர் ஜனாப் பாக்கீர் மாக்கார், எந்தக் கேள்வியையும் சபையில் கேட்பதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது என்று கூறவும், சகல எதிர்க்கட்சி உறுப்பினர்களும் கரகோஷம் செய்தார்கள்.

### பத்திரிகைச் செய்தி

ஒருகட்டத்தில் சூறாவளி நிவாரண வேலைகளைத் துரிதப்படுத்துதற்கு வாய்ப்பாக அம்பாறை, மட்டக்களப்பு பொலனறுவை, கட்டுநாயக்கா விமானநிலையப் பிரதேசம், கொழும்பு துறைமுகப் பிரதேசம் ஆகிய இடங்களில் பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தை அமுலுக்குக்

-- மாலி --

கொண்டுவரும் பிரகடனம் மீது பிரதமர் பேசினார். அப்போது 'டெய்லிநியூஸ்' பத்திரிகை ஒன்றைக் கையில் எடுத்த பிரதமர், ''சுதந்திரக் கட்சிக்குப் பெரிய ஒரு தலைவி இருக்கிறார். அவர் கம்பஹாவில் பேசும்போது...'' என்று கூறவும் சு. க. வைச் சேர்ந்த கம்பஹா உறுப்பினர் திரு. எஸ். டி. பண்டாரநாயகா எழுந்து ''நான் அதுபற்றி விளக்கமளிக்கவா? என்று பிரதமரை இடைமறித்துக் கேட்டார்.

'நான் யாரைப் பற்றிக் குறிப்பிடப்போகிறேன் என்பதை நீங்கள் புரியுமுன்னர் எப்படி விளக்கமளிக்கப் போகிறீர்கள்?'' என்றார் பிரதமர்.

### சிரிப்பொலி

''திருமதி ரி. யூ. டி. சில்வாவையா குறிப்பிடுகிறீர்கள்?'' என்றார் எஸ். டி.

'அவரா உங்கள் தலைவி? என்று பிரதமர் கேட்கவும் சபையில் சிரிப்பொலி எழுந்தது.

''அவரை உங்கள் தலைவியாக ஏற்றால் இப்போதுள்ளவரைவிட நன்றாக நடத்துவார்'' என்று பிரதமர் மேலும் கூறவும் சபையில் திரும்பவும் சிரிப்பு எழுந்தது.

கம்பஹாவில் பரிசளிப்பு வைபவம் ஒன்றில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா. திருமதி ரி. யூ. டி. சில்வா மாத்தளை அமரவன்ஸதேரோ, திரு. சூரியப்பெருமா ஆகியோர் பேசிய பேச்சுக்கள் நாட்டில் இனவாதத்தைத் தூண்டும் முயற்சியாகவிருப்பதாகக் கூறி, அதுபற்றி 'டெயிலிநியூஸ்' பத்திரிகையில் வெளியான செய்தியைப் பிரதமர் குறிப்பிட்டார்.

### இனவாதப் பேச்சு

ஐ. தே. க ஆட்சியில் சிங்களவர் தமிழர்களால் துன்புறுத்தப்படுவதாக திருமதி சிறிமாவோவும், தமிழரின் கடைகளைப் பகிஷ்கரிக்கவேண்டுமென திருமதி சில்வாவும், மட்டக்களப்புப் பகுதியில் பௌத்த விகாரைகளை உடைத்து அவ்விடங்களில் இந்துக் கோவில்களைக்கட்டியதாலேயே அங்கு சூறாவளி வீசியதாக அமரவன்ச தேரோவும், இப்போது ஜே. ஆர்— தொண்டமான் அரசாங்கமே நடைபெறுவதாக திரு. சூரியப்பெருமாவும் அங்கு பேசியிருப்பதாகப் பிரதமர் தெரிவித்தார்.

திருமதி சிறிமாவோ அப்படிப் பேசவில்லை என்று திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா கூறவும் ''அப்படியாயின் திருமதி ரி. யூ. டி. சில்வா என்ன பேசினார்?'' என்று பிரதமர் கேட்க, தாம் அவரின் பேச்சைக் கவனிக்கவில்லை என்றார் எஸ். டி.,

''எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்க்கும் செயல் இப்பேச்சுக்கள்'' என்று வர்ணித்த பிரதமர், இப்படியெல்லாம் தமிழருக்கு எதிரான பேச்சுக்களை வெளியில் நிகழ்த்தும் சுதந்திரக்கட்சியினர் சபையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் சேர்ந்து ஈழவிடுதலைப் புலிகள் தடைச் சட்ட மூலத்தை எதிர்த்து வாக்களித்தனர் என்றார்.

பிரதமர் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையிலேயே சபையுள் திருமதி சிறிமாவோ பிரவேசிக்கவும் பலத்த கூச்சல் எழுந்தது.

அத்தனகல உறுப்பினர் இவற்றையெல்லாம் மறுக்கிறாரா? என்று திரு. பிரேமதாசா கேட்க, ஆம் என்று பதிலளித்த திருமதி சிறிமாவோ, தமது மறுப்பை டெயிலிநியூஸ் பிரசுரிக்கவில்லை என்றும் குற்றம் சுமத்தினார்.

### நீதிமன்றமும் சட்டமாற்றமும்

அப்படியாயின் அதுபற்றி பத்திரிகைக் கவுன்சிலுக்கு முறையிடலாமே என்ற பிரதமர் பின்னர், இல்லாவிடில் நீதிமன்றத்துக்கே செல்லலாமே அது உங்களுக்கு மிகவும் பழக்கப்பட்டதாயிற்றே என்று கூற, நான் நீதிமன்றம் சென்றால் நீங்கள் சட்டத்தையே மாற்றிவிடுகிறீர்களே என்றார் சிறிமாவோ.

[5ம் பக்கம் பார்க்க]



# கம்பூச்சா தேசிய முன்னணி மக்கள் புரட்சிசபை கம்போடியாவில் பதவி ஏற்றது!

நாம்பென், ஜன. 9

கம்போடியாவின் பெரும் பகுதியைக் கைப்பற்றியுள்ள கம்பூச்சா, தேசிய முன்னணிப்படையினர் நாட்டை நிர்வகிப்பதற்காக மக்கள்புரட்சிச்சபை ஒன்றை நிறுவியுள்ளனர்.

முன்னணியின் தலைவர் ஜெனரல் சாம்டின் தலைமையில் 8 பேர் கொண்ட புரட்சிச் சபை தற்போது கம்போடிய நிர்வாகத்தை நடத்திவருகிறது என்று முன்னணியினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளையில் கம்போடிய முன்னாள் தலைவர் இளவரசர் சிகானுக் சீனாவிலிருந்து நியூயோர்க் புறப்பட்டுள்ளார்.

ஐ. நா.வில் தமது நாட்டின் நிலை குறித்துக் கூறுவதற்காக இளவரசர் அமெரிக்கா புறப்பட்டுள்ள இவ்வேளையில் ஐ. நா. பாதுகாப்புச்சபை இன்று அவசர அவசரமாகக் கூடுகிறதென்று அறிவிக்கப்பட்டது.

### சாம்டின் கருத்து

கம்போடியாவில் புரட்சி அரசை வெளியேற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டால் அது கம்போடியாவின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதாகவே அமையும் என்று புதிய புரட்சிச்சபைத் தலைவர் ஜெனரல் சாம்டின் கருத்துத் தெரிவித்துள்ளார்.

### தாய்லாந்து எல்லைகளை மூடியது

கம்போடியப் புரட்சியை அடுத்து அங்கிருந்து அகதிகள் தமது நாட்டுக்குள் வரக்கூடுமென எண்ணியுள்ள தாய்லாந்து, கம்போடிய எல்லைகள் யாவற்றையும் மூடியுள்ளது.

## சீனாவுக்கு பிரிட்டன் விமானங்கள்

மாஸ்கோ, ஜன. 9

சீனாவுக்கு பிரிட்டன் நவீன போர் விமானங்களை விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளது.

இதனை சோவியத் யூனியன் பலமாகக் கண்டித்துள்ளது. (இ)

# ஈரானில் 6 மாதத்தில் பொதுத்தேர்தல்! புதிய பிரதமர் தகவல்

## 10 நாட்களுக்குள் மன்னர் ஷா வெளிநாடு செல்வாராம்

தெஹ்ரான், ஜன. 9

ஈரானில் இன்னும் ஆறு மாத காலத்தில் பொதுத் தேர்தல் நடைபெறும் என்று புதிய பிரதமர் டாக்டர் பக்தியா அறிவித்துள்ளார்.

மன்னர் ஷா 10 நாட்களில் வெளிநாடு சென்றுவிடுவார் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

ஈரானிய எல்லைகளில் பூரண பாதுகாப்பு ஏற்படுத்தப்படும் என்றும் கூறிய டாக்டர் பக்தியா, ஈரானின் வெளிநாட்டு இராணுவ, பொருளாதார ஒப்பந்தங்கள் மறு பரிசீலனை செய்யப்படும் என்றும் தெரிவித்தார். இதேவேளையில் டாக்டர் பக்தியா பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டதற்கு அரசியல் சாஸன அங்கீகாரம் வழங்குவது குறித்து ஆராய்வதற்காக ஈரானிய கீழ் சபை எதிர் வரும் வியாழக்கிழமையும் செனட்சபை சனிக்கிழமையும் கூடுகின்றன.

### இராணுவச் சட்டம் நீக்கம்

இது இவ்வாறிருக்க ஈரானில் இராணுவச்சட்டத்தை முற்றாக நீக்குவதற்கு முன்னோடியாக தென்மாகாணம் ஒன்றில் இராணுவச்சட்டம் நீக்கப்பட்டுள்ளது. (இ)

# புதுவை சட்டசபை தேர்தலை உடன்நடத்துக

## 7 கட்சிகள் கோரிக்கை

சென்னை, ஜன 9

பாண்டிச்சேரியில் நகரசபைத் தேர்தல்களுக்கு முன்னர் சட்டசபைத் தேர்தலை நடத்துமாறு ஏழு கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பாண்டிச்சேரி லெப்டினண்ட் கவர்னர் குல்கர்ணியைக் கேட்டுள்ளனர்.

அ. அ. தி. மு. க., தி. மு. க., இந்திரா காங்கிரஸ், காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட், ஜனதா ஆகிய ஏழு கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிகள் நேற்று கவர்னரைச் சந்தித்து இதுபற்றிக் கேட்டனர்.

இதுகுறித்து தான் மத்திய அரசுடன் கலந்தாலோசிப்பதாக திரு. குல்கர்ணி தெரிவித்தார்.

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தை அண்டைமாநிலம் ஒன்றுடன் இணைக்க அரசு தீர்மானித்துள்ளதா என்று கட்சித் தலைவர்கள் கேட்டதற்கு இதுகுறித்து மத்திய அரசிடமிருந்து எதுவித அறிவித்தலும் தமக்கு வரவில்லை என்று கவர்னர் தெரிவித்தார். (இ)

# வல்லரசுப் போருக்கு வழி வகுக்கும்

## அமெரிக்க அதிபர் கருத்து

கம்போடியாவில் புரட்சிப் படைகளுக்கு ஆதரவளித்து வரும் வியட்நாம் படைகள், உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறவேண்டும். இல்லையேல் இப்பிரச்சினையில் சோவியத் யூனியன் தலையிடும் பட்சத்தில் அங்கு வல்லரசுப் போட்டிக்கு இடமேற்பட்டுப் போர் ஒன்று உருவாகும் வாய்ப்பு ஏற்படலாம் என்று அமெரிக்க அதிபர் திரு ஜிம்மி கார்ட்டர் கூறினார்.

### 1 லட்சம் துருப்புகளும் வெளியேறவேண்டும்

கம்போடியாவில் ஆக்கிரமிப்பு நடத்திவரும் ஒரு லட்சம் வியட்நாம் துருப்புகளும் உடனடியாக வெளியேற வேண்டுமென்றும் திரு கார்ட்டர் தெரிவித்துள்ளார்.

கம்போடியப் பிரச்சினையில் 3வது நாடொன்று தலையிடுவதை எவ்விதத்திலும் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

### பிரிட்டன் கவலை

கம்போடிய நிலைகுறித்து பிரிட்டன் கவலை தெரிவித்துள்ளது. பிரான்ஸ் மறைமுகமாகக் கண்டித்துள்ளது. (இ)

# இன்றைய இராசிப்பலன்

மார்கழி மாதம் 26-ந் திகதி (10-1-79)

புதன்கிழமை

**மேடம்:-** நடையில் தயக்கம் ஏற்படும் எதிர்பாராத செலவுகளுக்கு இடமுண்டு. பிரயாணத்தைத் தவிர்ப்பதுடன் எவ்விடயத்திலும் இன்று எச்சரிக்கையுடன் இருக்கவும்.

**இடபம்:-** முன்னேற்றம் தடைப்படும் பிள்ளையொன்றின் உடல்நலமும் பாதிக்கப்படலாம். ஆணவத்தைஅடக்கி நடக்கவும்.

**மிதுனம்:** வார்த்தை ஜாலம் செய்வதன்மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள். இருக்குமிடத்தில் ஆதரவு பெருகும் சிலருக்கு அதிர்ஷ்டமும் கிடைக்கலாம்.

**கடகம்:-** மனக்கவலைகளுக்கு இடமளிக்கும் சுறுசுறுப்பில் மந்தநிலை தென்படும். மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளநேரிடும். மதிவழி நடப்பின் வெற்றிகிடைக்கும்.

**சிங்கம்:-** தனத்துடன் வாழ்வு கிடைக்கும். எதிரிகள் கூட உங்களை வரவேற்பார்கள். மருத்துவத்துறையில் ஈடுபடுவோர்களுக்கு மகத்தான தினம் மகிழ்ச்சிகரமான தினம்.

**கன்னி:-** பணவிவகாரங்கள் மகிழ்ச்சியைத் தரும் புத்திரர் ஒருவரின் வெளிநாட்டுப் பயணத்தொடர்புக்கு நடவடிக்கை எடுக்கப்படும். தொழில்துறையிலும் வெற்றி கிட்டும்.

**துலாம்:-** எதிலும் கவனம் செலுத்தி நடக்கவும். சிலருக்கு அன்னியவாசமும் ஏற்படலாம். கொடுக்கல்வாங்கல் மூலம் பிணக்குகள் தோன்றி மறையும்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி தென்படும். இசைத்துறையில் அதிக ஆர்வம்காட்டுவீர்கள். பிள்ளைகளினால் பெருமைகிடமுண்டு.

**தனுசு:-** சூழ்ச்சிவலை பின்னும். சகோதரவழியால் சஞ்சலம் ஏற்படும் சிலர் கடன்படவும் நேரிடலாம் அபாயகாரியங்களில் பங்கு பற்றாது இருக்கவும்.

**மகரம்:-** இன்று முன்னணியில் நிற்பீர்கள் நல்லதீர்ப்பு வழங்கும்சந்தர்ப்பமும் கிடைக்கலாம். இலட்சியவாதிகளுக்கு வெற்றி கிட்டும் தெய்வ நம்பிக்கை மேலோங்கி நிற்கும்.

**கும்பம்:-** தொழிலில் வெற்றி விருந்தினர் வருகையுடன் வேடிக்கை பலவுண்டு சிலர் வாழ்க்கையில் இடமாற்றத்திற்கிடமுண்டு.

**மீனம்:-** மனைவாழ்வில் மகிச்சிகரமான சூழ்நிலைதென்படும். வருமானத்திலும் மகிழ்ச்சியுண்டு. புதுமனைகட்டுவதற்கும் சிலர் ஆலோசிக்கக் கூடும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# “சூறுவளிநிவாரணம்: அரசியல் லாபம் நோக்கமா? கூட்டணி மீது வீண்பழி”

## யாழ். எம். பி. சொல்கிறார்

(யாழ்ப்பாணம்)

“சூறுவளியால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மக்களுக்கு நாம் உதவுவதை அரசியல் லாபம் பெற முயல்வதாக சிலர் கூறுவது தமிழர் விடுதலைக்கூட்டணிமீது வீண் அவதூறு கூறுவதாகும்.”

இவ்வாறு யாழ்ப்பாணம் எம். பி திரு வெ. யோகேஸ்வரன் குருநகர் சென். ஜேக் சனசமூக நிலையபடிப்பக அடிக்கல்நாட்டு விழாவில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

“பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் இருந்து சன சமூக நிலையங்கள் சலுகைகள் பெற முடியாத நிலையில் இருந்த திட்டத்தை மாற்றி என்னுடன் ஒத்துழைத்த யாழ். அரசாங்க அதிபர் உட்பட செயலக உயர் அதிகாரிகளுக்கும் இச்சனசமூக நிலைய வாயிலாக நன்றி கூறுகின்றேன். மட்டக்களப்பு மக்கள் சூறுவளியால் கடும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்நேரம் எங்களால் முடிந்தவகையில் எம்மாலான உதவியை ஆற்ற வேண்டியது எம்முடைய தலையாய கடமையாகும். இந்த வகையில் அரசியல் லாபம் என்று சிலர் கூறுவது தமிழர் கூட்டணியை வேண்டுமென்றே அவதூறு கூறுவதாகும். பல சிறந்த சேவைகளை ஆற்றி வரும் இச்சனசமூக நிலைய இளைஞர்களைப்போல் தூய்மையான சேவை மனப்பான்மையுடன் இயங்கும் சனசமூகநிலையங்களுக்கு என்னாலான சகல உதவிகளையும் ஆற்றுவேன்.

விழாவில் யாழ். மேற்றிராசன பங்குத் தந்தை வணபிதா செல்வராஜா மங்கள விளக்கேற்றி சமயச் சடங்கை நிறைவேற்ற யாழ். எம். பி. அடிக்கல் நாட்டினார். நிலையச் செயலாளர் திரு. வி. எம். ஜெரூட் அனைவருக்கும் நன்றி கூறினார். [illegible] உ)

# சிங்களத் தேர்ச்சி விதிவிலக்கு

(பண்டத்தரிப்பு)

தபால் தந்தித் தொடர்புகள் திணைக்களத்தில் கடமையாற்றும் தந்திச் சேவகர்கள், பொதிசுமப்பாளர்கள், சாரதிகள் ஆகிய தரங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு சிங்கள மொழித் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமான சுற்றறிக்கையொன்று கொழும்பிலுள்ள தபால் மாஅதிபர் அலுவலகத்தினால் நாட்டிலுள்ள சகல தபாலகங்களுக்கும் அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டது. இதன் பிரகாரம் சிங்கள மொழித் தேர்ச்சி பெறாத காரணத்தினால் இதுவரை காலமும் நிறுத்தி வைக்கப்பட்ட இந்த ஊழியர்களின் வருடாந்த சம்பள உயர்வு, பதவி ஊர்ஜிதம், பதவி நிரந்தரம் என்பன விரைவில் வழங்கப்படவுள்ளன. (உ)

# மாணவர் - பொலிஸ் மோதலில் ஒருவர் பலி

புதுடில்லி, ஜன. 9

உத்தரப் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மாணவர் - பொலிஸ் மோதலில் பொலிசார் துப்பாக்கியால் சுட்டபோது மாணவர் ஒருவர் பலியானார் என்றும் 5 பேர் படுகாயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

பஸ்களையும், அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களையும் கல்வீசித் தாக்கியதாக மாணவர்கள் பின்னர் பொலிசாரைத் தாக்கினர். (இ)

நாகம்ஸ்
(கன்குஸம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவராம் - சந்திரகலா
அநுராகம்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
மாணவன்

Rio Daily 10-30, 4-45, 7-00,
(Jaffna) 9-30.
Phone: 7607
TEN-G-MEN

பௌர்ணமி

## கலைவிழாவில் 'தியாகத்தீ'

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை நடாத்தும் பௌர்ணமி கலைவிழா தொடரில் இம்முறை கோண்டாவில் ஸ்ரீ வாகீஸ்வரி நாடக மன்றத்தினரின் "தியாகத்தீ" என்னும் சமூக நாடகம் 65-வது தடவையாக நடைபெறவிருக்கிறது.

இம்மாதம் 12-ந் திகதி பௌர்ணமியன்று நடைபெறும் கலைவிழாவில் மற்றும் பல கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும். (ஊ)

## தற்காலிக பதிவாளர்

[அரியாலை]

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தற்காலிக பதிவாளராக நல்லூரைச் சேர்ந்த திரு. கே. அரியரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடைசி இரு தினங்கள்
ராஜா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
ராமன் தேடிய சீதை
(கலர் - புதிய பிரதி)

வின்ஸர் (யாழ்ப்பாணம்) போன்: 466
தினசரி 5 காட்சிகள்
சிவாஜி--மாலினி பொன்சேகா
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

3-வது ஜனத்திரள் வாரம்
ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா
மற்றும் பலர் நடித்த
உயர்ந்தவர்கள்

கடைசி இரு தினங்கள்
மனோகரா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகாந்த் சுகுமாரி நடித்த
கணவன் மனைவி
13-1-79 முதல்
மூன்று முடிச்சு

REGAL NOW SHOWING
(Jaffna) Daily at, 4-30, 7-00 & 9-30 p. m.
Gamini Fonseke — Mary Tammy
in
RAMPAGE
(Jungle Adventure வனந்தரச்சீரச் செயல்கள்) (Color)

தினசரி 4 காட்சிகள்
ராணி (யாழ். நகர்) எஸ் எஸ். ஆர். - ராஜசுலோசனா நடித்த
தைபிறந்தால்வழிபிறக்கும்
(புதிய பிரதி)

SHANTHI JAFFNA. Phone: 7642.
10-30, 2-30, 6-30, 9-45 — 9 — 11
Malini Fonseka...Joe Abeyawickerama in
......LESTER JAMES PERIS......
VEERAPURAN APPU —Cinemascope—
வீரபுரன் அப்பு —சிறந்த சிங்களப்படம்—
அடுத்து வீரமுழக்கமிடும் "வீரத்திருமகன்"

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சுஜாதா - கமலஹாசன் - சுமித்ரா
ல லி தா

லிடோ (யாழ். நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
ஆசை அறுபதுநாள்

# பிரதமர் என்னைக்குறுக்கு.....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரஸ்தாப செய்தியில் தன்னைப்பற்றிக் குறிப்பிட்டிருந்த மூதலாவது பந்தி பிழையானதெனத் தான் மறுப்புத் தெரிவித்தபோதும் லேக்ஹவுஸ் பத்திரிகைகள் தனது மறுப்பைப் பிரசுரிக்கவில்லை என்றும் ஆனால் வீரகேசரி மாத்திரம் முழுமையாகப் பிரசுரித்திருக்கிறது. பிரதமர் அதனைப் படிக்காமலிருக்கலாம் என்றும் கூறினார் சிறிமா.

நீங்கள் அதனைப் படித்தீர்களா? என திரு. பிரேமதாச கேட்க, எனக்குத் தமிழ் தெரியாது, ஆனால் தெரிந்தவர்கள் மூலம் அறிந்துகொண்டேன் என்றார் அத்தனகல உறுப்பினர்.

திருமதி சிறிமாவோ தமது மறுப்பைத் தெரிவித்த பின்னரும் பிரதமர் விட்டுவிடவில்லை.

தமிழர் சிங்களவரைத் துன்புறுத்துவதாக நீங்கள் கூறவில்லை என்றுள், தமிழரால் சிங்களவருக்குத் துன்புறுத்தல்கள் எதுவும் இல்லை என்று கூறினீர்கள்? என்று கேட்ட பிரதமர் இக்கூட்டத்தில் மற்றையவர்கள் என்ன பேசினார்கள்? நீங்கள் ஏன் அவர்கள் அப்படியெல்லாம் பேசியதைத் தடுக்கவில்லை. என்று இப்படியாகத் தொடரவே திருமதி சிறிமாவோ பெரும் சினமடைந்தவராக சபையில் காணப்பட்டார்.

பிரதமர் தமக்கே உரிய பாணியில் வெகுஅநாயசகமாக சிங்களமொழியில் பேசிக்கொண்டிருந்தார்,

இக்கட்டத்தில் திருமதி சிறிமாவோ, பொறுப்பு வாய்ந்த ஒரு பிரதமர் இப்படிப் பேசலாமா என்றும் கேட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்தின் பக்கம் திரும்பி அவருடன் அடிக்கடிபிரஸ்தாபித்துக்கொண்டிருந்தார் சிறிமாவோ.

பிரதமருக்கும் சபாநாயகருக்குமிடையிலும் சபையில் வாக்குவாதம் நிகழ்ந்தது.

### சபாநாயகரும் பிரதமரும்

அத்தனகல உறுப்பினர் பிரஸ்தாப செய்தி தொடர்பாகச் சபையில் மறுப்புத் தெரிவித்துவிட்ட தால் அதனைப் பிரதமர் ஏற்கவேண்டுமென்றும் தொடர்ந்தும் அதுபற்றிப் பேசவேண்டாமென்றும் சபாநாயகர் கூற. மறுப்பைத் தாம் ஏற்றுக்கொண்டாலும் அச்செய்தி தொடர்பான தமது கருத்தை வெளியிடத் தமக்கு உரிமை இருக்கிறதென்றும் பிரதமர் வாதிட்டார்.

திருமதி சிறிமாவோவைப் பார்த்து பத்திரிகையில் வெளியான செய்தி பிழையெனில் நீங்கள் அங்கு என்ன பேசினீர்கள்?

என்று கேட்க, "அதை நான் இங்கு கூறத் தொடங்கவில்லை" என்றார் சிறிமா.

### பிரதமர் - சிறிமா லடாய்

திருமதி ரி. யூ. டி: சில்வாவும் மற்றையோரும் என்ன பேசினார்கள்? என்று பிரதமர் தொடர்ந்தும் கேட்கஅவற்றை அவர்களிடம் போய்க் கேளுங்கள், அவர்களிடம் சி ஐ டி.யினர் வாக்குமூலம் பெற்றிருக்கிறார்கள். சி ஐ டி,யினரைக் கேளுங்கள் அல்லது ஒலிப்பதிவு நாடாவைக் கேளுங்கள் என்று சிறிமாவோ கோபமாகவே பதிலளித்தார் "என்னை இங்கு குறுக்குவிசாரணை செய்ய உங்களால் முடியாது" என்றார் அவர்.

"அது உரிய இடத்தில் நடக்கும்" என்ற பிரதமர், என்ன பேசப்பட்டதென்பதை நீங்களே எனக்குக் கூற மறுக்கும்போது திருமதி சில்வா கூறுவார் என்று சிரிப்புக்கிடையே கூறினார்.

### பிக்குவுக்கு ஒரு பதவி

ஆத்திரமடைந்தே பேசிக்கொண்டிருந்த பிரதமர், சூறாவளிக்கான காரணத்தைக் கண்டுபிடித்த தேரோவை வெளிமண்டல ஆராய்ச்சி நிலைய பணிப்பாளராக்கவேண்டும் என்றார்.

பிக்கு கூறிய காரணத்துக்காகவே சூறாவளி ஏற்படுவதாயின் அது 1971 ஏப்ரலில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் விகாரைகளுக்குக் குண்டு வீசப்பட்ட அச்சமயத்திலல்லவா வீசியிருக்கவேண்டும்? என்றார் அவர்.

அவசரகாலச்சட்டத்தின் கீழ் கதிர்காமத்தில் அழகி மனம் பெரிக்கும் மற்றையோருக்கும் நிகழ்ந்தவற்றைப் பிரதமர் குறிப்பிட்டபோது, "அதற்காகத்தானே லெப்டினன்ட் விஜயசூரியா சிறைக்கு அனுப்பப்பட்டார்" என்று சிறிமாவோ கூற அவரை அல்ல, அவசரகாலச்சட்டத்துக்கு ஒப்பமிட்டு அனுமதியளித்த உங்களைச் சிறைக்கு அனுப்ப வேண்டுமென்றார் பிரதமர் கடுமையாக.

### அநுரா குறுக்கிடு

தமிழர் கடைகளைப் பகிஷ்கரிக்கவேண்டுமென்று கோரும் பிரசுரமொன்றையும் பிரதமர் சபையில் வாசித்த போது "இப்படியான பேச்சுக்களை இச்சபையில் உங்களின் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சரே பேசியிருக்கிறாரே" என்றார் அநுரா பண்டாரநயாக்கா

"ஆம், அவருக்கு இங்கு பேச உரிமை இருக்கிறது. அவர் பேசியவற்றைப் பின்னர் நாம் உங்களைப்போல் மறுக்கவில்லை" என்றார் பிரதமர்!

"ஒற்றுமை—சமாதானம்—ஒழுக்கம்—அபிவிருத்தி இவைதான் எமக்குத் தேவை. இவற்றைக் குலைத்து இனக்கலவரத்தைத் தூண்டி, அரசியல் லாபம்பெறச் சுதந்திரக்கட்சி முயல்கிறது அதற்கு அரசு இடமளியாது" என்ற பிரதமர், முன்னர் டட்லியின் வயிற்றில் இட்லி, தோசை, மசாலவடை என்று கூச்சலிட்டவர்கள் தேர்தல் ஆரம்பித்ததும் தமிழர் கூட்டணியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள் என்றும் கூறினார்.

கம்பஹா கூட்டத்தில், ஏனையோரின் வகுப்புவாதப் பேச்சை, திருமதி சிறிமாவோ தடுத்திருக்கவேண்டும் என்பது பிரதமரின் வாதமாகும்.

தேநீர் இடைவேளைக்குப் பின்னரும் பிரதமர் தொடர்ந்தபோது திருமதி சிறிமாவோவும், கூட்டணி உறுப்பினர்களும் சபையில் இருக்கவில்லை.

—அவ்வேளை, பிரதமர் தமது பேச்சை முடித்துவிடவே, விவாதமின்றியே பிரகடனம் நிறைவேறியது. கூட்டணியினர் சபையுள் பிரவேசித்தபோது குழுநிலைத் திருத்தங்கள் சபையில் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

### வெள்ளி விருந்து

—மறுநாள் வெள்ளிக்கிழமையும் இப்பிரச்னையைச் சபை ஒத்திவைப்பின்போது திரு. அநுரா பண்டாரநாயக்கா கிளப்ப, அன்றும் சபையில் முதல்நாளைப் போன்றே குழறல் எழுந்தது.

—பிரதமருக்கும், திரு. அநுரா பண்டாரநாயக்காவுக்குமிடையே பலத்த வாக்குவாதங்கள் ஏற்பட்டன.

அத்துடன், அன்றும் பிரதமர்—சபாநாயகருக்கிடையிலும் வாதங்கள் நிகழ்ந்தன; இதில் திரு. அமிர்தலிங்கமும் தலையிட்டார்.

சபை ஒத்திவைப்பின்போது திரு. அநுரா இப்பிரச்னை பற்றி முன்னறிவித்தலின்றி விவாதிக்கலாமா என்ற வினாவைச் சபாநாயகர் எழுப்பிய போதே பிரதமர் விவாதிக்க முடியுமென்று வாதிட்டார். அப்போது சபை நிரந்தரவிதிகள் அதற்கு இடமளிப்பதாக திரு. அமிர்தலிங்கமும் தலையிட்டு விளக்கினார். அமைச்சர்கள் எட்வின் திலகரத்னவும், சிறில் மத்யூவும் சபையில் இனத் துவேஷத்தைத் தூண்டும் வகையில் பேசியிருப்பதாக திரு. அநுரா வாதிட்டார்.

காலை 10 மணிக்குச் சபை கூடியதும் சுமார் ஒரு மணி நேரத்திலேயே அன்றைய அலுவல்கள் முடிவடைந்துவிடச் சபை ஒத்திவைக்கப்பட்டது. (அ)

## லொத்தர்சபை ஊழியருக்கு பரிசு: பொலிஸ் விசாரணை

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபையைச் சேர்ந்த 53 ஊழியர்கள் 16 மாத காலத்தில் தேசிய லொத்தர் பரிசுகளைப் பெற்றது தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர்.

லொத்தர் சபை ஊழியர்களுக்குப் பரிசுகள் கிடைத்த சீட்டிழுப்பின்போது சமுகமளித்திருந்த பொலிசார், சபை ஊழியர்கள்பற்றிய விபரங்களையும் சீட்டிழுப்பு இடம்பெற்ற இடங்கள் ஆகிய விபரங்களையும் தீவிரமாக ஆராய்ந்துவருகின்றனர்.

லொத்தர்சபையைச் சேர்ந்த பரிசு பெற்ற 53 ஊழியர்களில் சிலர் மூன்று நான்கு பரிசுகளையும் பெற்றிருந்தனர். இவர்களில் ஒருவர் 2-ம் பரிசான 40 ஆயிரம் ரூபாவையும் 2 ஆறுதல் பரிசுகளையும் பெற்றார் என்றும் மற்றவர்கள் ஆறுதல் பரிசுகளைப் பெற்றார்கள் என்றும் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. (இ)

## நூல்வெளியீடும் பொன்னாடை போர்த்தலும்

[பண்டத்தரிப்பு]

அராலி ஆவரசம்பிட்டி அம்பாள் அந்தாதி வெண்பா நூல் வெளியீட்டுவிழா தைப்பொங்கல் தினமான ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் அராலி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக வடமாநில கல்வி அதிபர் திரு. தி. மாணிக்கவாசகர் கலந்துகொள்வார். ஆசியுரைகளை வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. மு. சுப்பிரமணியம், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. க. சிற்றம்பலம், நவாலியூர் நா. சச்சிதானந்தன், பண்டிதர் ப. இராசகுரு, பண்டிதர் வி. நவரத்தினம், திரு. நாக பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்துவர்.

இவ்விழாவில் திரு. என். ஆர். கோவிந்தசாமி வடமாநில கல்வி அதிபர் திரு. மாணிக்கவாசகரினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார். [உ]

## கத்திக்குத்துக் காயங்களுடன் சடலம்!

[கம்பளை]

மகாவலி கங்கையில் முகத்திலும், நெஞ்சிலும் கத்திக்குத்துக்காயங்களுடன் ஒருவரது சடலம் மிதக்கக்கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. [உ]

### தகுதியற்றவர்களை ஆசிரியர்களாக நியமித்து

# எமது மாணவர்களின் கல்வியைச் சீர்குலைக்காதீர்

## கல்வியமைச்சருக்கு பண்டிதர் தந்தி!

[யாழ்ப்பாணம்]

"தகுதியற்றவர்களை ஆசிரியர்களாக நியமித்து எமது மாணவர்களது கல்வியைச் சீர்குலைக்கும் சூழ்ச்சிக்கு இடம் கொடுக்க வேண்டாம், எனவே தகுதியானவர்களை ஆசிரியர்களாக நியமிக்க நடவடிக்கை எடுக்கவும்."

இவ்வாறு கோரும் அவசரத் தந்தி ஒன்றை ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கல்வி அமைச்சருக்கும் அமைச்சின் செயலாளருக்கும் அனுப்பியுள்ளார்.

இத் தந்தியின் பிரதி ஒன்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இதுபோன்ற தந்திகளை யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோரும் கல்வி அமைச்சருக்கு அனுப்பியுள்ளனர்.

பண்டிதர் அனுப்பிய தந்தியின் விபரம் வருமாறு:

எனது தொகுதியில் ஆசிரிய நியமனங்கள் முறையின்றியும் தகுதி நோக்காமலும் ஊழலுக்கு இடமளிக்கும் வகையிலும் கொடுக்கப்பட்டுள்ளது; எனவே இவ்வாறு நியமனம் வழங்குவதை நிறுத்துவதுடன், இதுவரை கொடுத்த நியமனங்களையும் ரத்துச் செய்யுமாறும் தகுதியானவர்களுக்கு முறையாக நியமனம் வழங்குமாறும் நீதியின் பெயராலும் ஊழல் தாண்டவமாடுவதைத் தடுப்பதற்காகவும் மக்களின் வேதனையையும் வெறுப்பையும் நீக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எமது மாணவர்களின் கல்வியைச் சீர்குலைக்கும் சூழ்ச்சிக்கு இடம் கொடுக்க வேண்டாம் என வற்புறுத்துவது மக்கள் பிரதிநிதி என்ற முறையில் எனது கடமையாகும். [இ]

## நெதர்லாந்து பயணமானார்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய கட்டிடத் திணைக்களக் கணிகாணிப்புப் பொறியியலாளர் திரு. மு. சுப்பிரமணியம் அரசாங்க புலமைப் பரிசில் பெற்று நேற்று நெதர்லாந்து பயணமானார். வீடமைப்பு, திட்டமிடல், கட்டட நிர்மாணம் முதலான துறைகளில் திரு. சுப்பிரமணியம் நெதர்லாந்தில் தெரிந்து வருவார்.

யாழ். இந்துக் கல்லூரிப் பழைய மாணவரான திரு. சுப்பிரமணியம் வண்ணார் பண்ணை கிழக்கு அம்பலவாணர் முத்தையா தம்பதிகளின் புதல்வராவர். (அ)

# சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

குளியாப்பிட்டியில் இடம் பெற்ற 698வது தேசிய சுவீப் சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
**10 R 0746**
ரூபா 100,000

இரண்டாவது பரிசு
**13 F 0727**
ரூபா 40,000

மூன்றாவது பரிசு
**11 N 0564**
ரூபா 10,000

தலா 1,815 ரூபா ஆறுதல் பரிசு பெறும்விவரம் வருமாறு!

01 A 0406 10 A 0079
22 A 0594
05 B 0080 26 B 0746
19 C 0118 19 C 0225
22 C 0192 28 C 0078
30 C 0406
02 D 0079 09 D 0728
34 D 0102
04 E 0748 25 E 0778
07 F 0191 12 F 0591
13 F 0009 17 F 0235
30 F 0533
05 G 0917 07 G 0753
19 G 0371 25 G 0243
25 G 0757 27 G 0964
10 H 0263 25 H 0611
01 J 0466 03 J 0216
09 J 0076 10 J 0230
13 J 0251 23 J 0740
33 J 0759
01 K 0327 07 K 0050
08 K 0193 11 K 0241
13 K 0143 21 K 0070
21 K 0359 26 K 0957
32 K 0790
09 L 0396
13 M 0506 20 M 0516
24 M 0502 26 M 0364
34 M 0309
01 N 0488 06 N 0600
20 N 0658 22 N 0366
26 N 0791 32 N 0299
04 O 0981 15 O 0419
13 P 0819
13 Q 0507 19 Q 0450
23 Q 0761 30 Q 0729
31 Q 0644
01 R 0806 07 R 0157
12 R 0347 24 R 0108
30 R 0362
08 S 0845 12 S 0787
13 S 0212 26 S 0727
30 S 0292 31 S 0478
02 T 0700 06 T 0989
11 T 0879 12 T 0190
25 T 0657
07 U 0567 23 U 0705
27 U 0371 30 U 0924
08 V 0972 15 V 0256
06 W 0472 11 W 0790
24 W 0139
03 X 0600 06 X 0617
19 X 0934
01 Y 0247 04 Y 0880
17 Y 0260 24 Y 0651
29 Y 0263
02 Z 0321 11 Z 0547
13 Z 0620

[இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்]

# இன்று பீட்டர் கெனமன் உடுப்பிட்டி விஜயம்

[நெல்லியடி]

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளரும், முன்னாள் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான திரு. பீட்டர் கெனமன் உடுப்பிட்டித்தொகுதிக்கு இன்று விஜயம்செய்ய விருக்கின்றார். உடுப்பிட்டிக்கு விஜயம் செய்யும் அவர் அன்றுபூராவும் பல நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளவிருக்கிறார்.

மறைந்த கம்யூனிஸ்ட்கட்சி பிரமுகரான "பொன்னிலம் பொன்னையா" நினைவாக கோயிற்சந்தையில் நிர்மாணிக்கப்பட்ட பஸ்தரிப்பு நிலையத்தைத் திறந்துவைக்கும் பொருட்டே அவர் விசேடமாக இங்கு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. முன்னை நாள் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு ரீ. கந்தசாமி தலைமையில் இப்பஸ்தரிப்பு நிலையத் திறப்பு விழா நடைபெறும்.

திறப்புவிழாவினை அடுத்து கரவெட்டி துன்னாலையிலுள்ள தனியார் இல்லமொன்றில் ஏற்பாடாகியுள்ள கருத்தரங்கில் கலந்துகொண்டு அவர் உரையாற்றுவார்.

அடுத்து உடுப்பிட்டித் தொகுதி கம்யூனிஸ்ட்கட்சி இளைஞர் அமைப்புக்களுடன் கலந்தாலோசனை செய்வார். அச்சமயம் கட்சியின் பணிகள் பற்றியும் அரசியல் நிலை என்பனபற்றியும் எடுத்துக் கூறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.


பரீட்சைகளுக்கு! தொழில்பெற! எழுதப் பேச!
ஆசிரியர் கலாசாலை ஆங்கில விரிவுரையாளர் கற்பிக்கும்
**ஆங்கிலம்** G. C. E. (O. L) (A. L.)
வர்த்தகம், விஞ்ஞானம், கலை, TYPING-SHORTHAND
பாட்டு, வயலின், மிருதங்கம்
12-1-79 காலை 10 மணிக்குத் தொடங்கும்
**கலாநிலையம்**, மாவடி, வட்டுக்கோட்டை
1264



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு தைமாதம் 10-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General PostOffice
The Eelanaadu Post Bex No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389, Registered as a News paper in Sri Lanka.


## மயான...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொலையா என்பது பற்றி தீர்ப்பளிக்கப்படவில்லை.

சடலத்தை எவரும் நேற்று வரை அடையாளம் காணவில்லை. பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்ட பதில் நீதவான், மேல்விசாரணையை ஒத்திவைத்தார். [கை]


## ஓடிய ரயிலில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மயக்கமான நிலையில் அவர் நேற்றிரவு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். கால்கள் பாதிக்கப்பட்டபோதிலும் உயிருக்கு ஆபத்தில்லை என்று தேற்று தெரிவிக்கப்பட்டது.

# "இறைவன் திருவடி அடைய துறவு வேண்டியதில்லை"

## குருசாமி தேசிகர் தரும் விளக்கம்



இறையருளைப் பெறுவதற்கு ஆலயம்தான் முக்கியம்.

[யாழ்ப்பாணம்]

'முடி வளர்த்து, தாடி வளர்த்து காவியுடை தரித்து துறவியாக மாறித்தான் முத்தியடைந்து இறைவன் திருவடியை அடைய வேண்டும் என்பதில்லை. ஒருவன் இல்லறத்தை நல்லறமாக நடத்தி தனது வாழ்க்கையின் கடமைகளை நேர்மையாகவும் சீராகவும் செய்துவரின் முத்தியடைந்து இறைவன் திருவடியை அடையலாம். இல்லறத்தின் மூலம் முத்தியடைந்தவர்கள் வரிசையில் இளையான்குடிமாறனார், அமர்நீதி நாயனார் ஆகியோராவர்' என்று காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்ற இரண்டாம் நாள் மணிவாசகர் விழாவில் தமிழகப் பெரியார் வித்துவான் வி. சா. குருசாமி தேசிகர் பேசுகையில் தெரிவித்தார்.

மணிவாசகர் சபைக் காப்பாளர் திரு. க. சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் குருசாமி தேசிகர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'பசுவின் எந்த பாகத்திலும் பால் இருந்தாலும் அதன் மடியின் மூலம்தான் நாம் பாலைப் பெறலாம். அதுபோல்தான் கடவுள் எல்லா இடங்களிலும் இருந்தாலும் நாம் ஆலயங்களிலேதான் திருவருள் என்னும் பாலைப் பெறலாம். அதாவது

முற்றும் துறந்த முனிவர்களும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்றோரும் ஆலய வழிபாடுதான் அரன்திருவடிகளை அடைதற்கு சிறந்த பார்க்கமென எண்ணி ஆலயங்கள் தோறும் சென்று இறைபாடி வந்தார்கள்.

திருவாசகத்திற்குப் பல பெருமைகள் இருந்தாலும் இறைவன் திருக்கரத்தால் எழுதியமை தலைசிறந்ததொரு பெருமையாகும். இந்த விதமான சிறப்பு எந்தவொரு சமயத்திலும் இல்லை என்று திடமாகக் கூறலாம்' என்றார். [உருத்-நி-உ]

ஈழத்துச் சிதம்பரத்தில்

# இன்றுமுதல் அன்னதானம் விசேட பஸ் சேவை

[யாழ்ப்பாணம்]

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நாளை நடைபெறவிருக்கும் இரதோற்சவத்தை முன்னிட்டு இன்று முதல் மாணிக்கவாசகர் மடாலயத்தில் அன்னதான சபையினர் அன்னதானம் வழங்கவிருக்கின்றனர்.

மேற்படி சபையினர் அடியார்களின் வசதியை முன்னிட்டு உற்சவ இறுதி நாளான 12ம் திகதி தீர்த்தோற்சவம் வரை தொடர்ந்து அன்னதானம் வழங்கவுள்ளனர்.

வெளியூர் அடியார்களின் ஈழத்துச் சிதம்பரத்தின் போக்குவரத்து வசதிக்காக காரைநகர் இ. போ. ச. டிப்போவினர் ரதோற்சவத் தினமான நாளையும் நாளைமறுதினம் தீர்த்தோற்சவத்திற்கும் விசேட பஸ் சேவைகளை ஒழுங்குசெய்துள்ளனர்.

வானொலியில் அஞ்சல்

ரதோற்சவ நிகழ்ச்சிகள் நாளை காலை 10-00 மணி முதல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் நேரடி அஞ்சல் செய்யப்படவிருக்கிறது. (உரு நி.—உ.)


## மரண அறிவித்தல்

### எஸ். சிவசிதம்பரம்

ஓய்வுபெற்ற நீர்ப்பாசன என்ஜினியர் திரு. எம். சிவசிதம்பரம் காலமானார். இவர் காலஞ்சென்ற செல்லப்பா தம்பதிகளின் மகனும் கெங்காதேவி, கமலாதேவி, சிவசுந்தரம் ஆகியோரின் தந்தையும், எஸ். நாகமுத்து, வேலுப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் சிவயோகநாதன், காலஞ்சென்ற லெட்சுமிநாதன் ஆகியோரின் மாமனுருமாவார். ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் ஒரு மணியளவில் புன்னாலைக்கட்டுவன் விலங்கன் மயானத்தில் நடைபெறும். 1286



## மரண அறிவித்தல்

### திருமதி ஆச்சிமுத்து துரையப்பா

கொக்குவில் ஸ்ரேசன் றோட்டைச் சேர்ந்த ஆச்சிமுத்து காலமாகிவிட்டார். அவர் காலஞ்சென்ற துரையப்பாவின் மனைவியும், நல்லூர் கமநலச் சேவை நிலையத்தைச் சேர்ந்த சிவரத்தினம், பூரோன் எலக்ரிக்கல்ஸ் உரிமையாளர் அழகரத்தினம், தங்கரத்தினம் ஆகியோரின் தாயாரும், சின்னம்மா, பத்மாவதி, குமாரசாமி ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்துக்கு 10ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். 1285